# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
# சாதாரணக் கூட்ட அறிவிப்பு

29.05.2020–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

056. நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5437/ஜே2/2020, நாள்.27.03.2020ன்படி விளம்பரம் வந்தவாசி நகராட்சி பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு விளம்பர படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி கொரோனா நோய் சம்மந்தமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த புதியதாக 5 PENDRIVER தீபக் செல்சென்டர், வந்தவாசியில் வாங்கி கொள்ள ஆகும் செலவினம் ரூ.1750/–யை திரு.பெ.சிவக்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் வழங்கப்பட்டது. எனவே இத்தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.760 /2019/இ1, நாள்.04.05.2020

**(அனுமதிக்கப்பட்டது)**

057. பழுது பார்த்தல் வந்தவாசி நகராட்சி பொதுசுகாதாரவாகனம் எண்.TN25/BX1193 என்ற வாகனத்திற்கு தகுதிசான்று பெறவேண்டி (FC) செய்ய உள்ளதால் கீழ்கண்ட பழுது நீக்கம் செய்ய ஒட்டுநர்திரு.M.கோபிநாத் அவர்கள் கடிதத்தின் பேரில் கீழ்கண்ட பழுதுகளை நீக்கம் செய்யுமாறு கடிதம் வழங்கியதன் பேரில் துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பின் பேரில் கீழ்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற செந்தில் முருகன் ஒர்க்ஸ், நெ.37/2, பூந்தமல்லி, பைபாஸ்ரோடு, சென்னை என்ற நிறுவனத்தில் பழுதுகளை நீக்கம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு இலட்சம்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. **பழுது நீக்கம் செய்யவேண்டியது.**

1.) பெயின்டிங் செய்யவும்
2.) அனைத்து ஆயில் சர்வீஸ் செய்யவும்
3.) அனைத்து எலக்ட்ரிக் செக்கப் செய்யவும்
4.) நான்கு வீல் கீரிஸ் பேக்கிங் செய்யவும்
5.) நான்கு வீல் ஸ்பிரிங் பிளேட் ரீசெட் மற்றும் Extra Plate போடவும்
6.) புதிய பேட்டரி போடவும்
7.) புதிய கிளட்சு பிளேட் மாற்றவும்
8.) டைனோமோ செல்ப் மோட்டார் சர்வீஸ் செய்யவும்.
9.) சைடு மிர்ரர் போடவும்
10.) அனைத்து ஜாயிண்ட் செக்கப் செய்யவும்
11.) புதிய வேகக்கட்டுபாட்டு கருவி போடவும்
12.) வீல் ஆலாய்மெண்ட் செய்யவும்
13.) ரேடியேட்டர் சர்வீஸ் செய்யவும்
14.) ஹைட்ராலிக் சர்வீஸ் செய்யவும்
15.) பம்பர் மற்றும் செப்டிஸ்கார்டு டிங்கர் ஒர்க்ஸ் செய்யவும்
16.) மேலும் விடுபட்ட பழுதினை சரிசெய்யவும்

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2568 /2020/எச்1, நாள்.20.05.2020

**(அனுமதிக்கப்பட்டது)**

058.வந்தவாசி நகரப்பகுதி, வார்டு–B, பிளாக்–20, ந.அ.எண்.10/4–ல் 5442 ச.மீ பரப்பில் (நகர்புறம் மட்டும்) குடியிருப்பு மனைகளுக்கான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க, உத்தேச சாலைகள் அமைப்பு, நகர் ஊர் அமைப்புதுறை, துணை இயக்குநர் வேலூர், அவர்களின் ந.க.எண்.5213/2018/வே.ம.3, நாள்.04.03.2020 என்ற கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு உரிமையாளர், வந்தவாசி சார்பதிவாளர் ஆவண எண்.1173/2020 , நாள்.29.05.2020–ன் மூலம் மேற்படி சாலைகளையும் மேநீர் நீர்தேக்கத் தொட்டிக்கான இடங்களை நகராட்சி ஆணையாளர் பெயரில் தான் செட்டில் மெண்ட் எழுதி பத்திரம் ஒப்படைப்பு செய்துள்ளார்.

சாலை எண்.01 – அகலம் 33 –0 அடி
நீளம் 241.6அடி (வடபக்கம்) 238.3அடி (தென்பக்கம்)
பரப்பு 7918.35 சதுர அடிகள்.

சாலை எண்.02 – அகலம் 24 –0 அடி
நீளம் 228.6 அடி (வடபக்கம்) 226.3அடி (தென்பக்கம்)
பரப்பு 5458.8 சதுர அடிகள்

OHT –619 சதுர அடிகள்.

மேற்படி சாலைகளை மன்றம் நகராட்சி சொத்துப்பட்டியலில் சேர்த்து நகராட்சியில் பராமரிப்பிற்காக அனுமதி வழங்க பொருள் வைக்கப்படுகின்றது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.642 /2020/நஅஆ, நாள்.29.05.2020

**(அனுமதிக்கப்பட்டது)**

059. தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2020 –2021–ல், வந்தவாசி நகராட்சிப்பகுதி, வார்டு19–ல் (புதிய பேருந்து நிலைய அணுகு சாலை) தார்சாலை அமைக்க விவரமான திட்ட அறிக்கை ரூ.100. 00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.100. 00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோர முன் அனுமதி கோரி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.527 /2020/இ1, நாள்.29.05.2020)

**(அனுமதிக்கப்பட்டது)**

060. வந்தவாசி நகராட்சி வார்டு–1 முதல் 24 வரை டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்கவும், தொற்று நோய்களை பெருந்தாக்க அளவில் தோன்றா வண்ணம் துரிதபடுத்தவும், கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும், 01.05.2020 முதல் 31.05.2020 வரை 1 மாத காலத்திற்கு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.4414/2019/பா.உ 04.02.2020ன் படியும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் செய்யாறு அவர்களின் ந.க.எண்.2833/இ4/2013, நாள்.10.2.2020ன்படி இந்நகராட்சி செயல்முறை ந.க.எண்.1530/2020/எச்1, நாள்.04.05.2020ன் படியும், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட நாள் அறிவுரைகள் நாள்.16.03.2020ன் படி வந்தவாசி நகராட்சியில் ஊராட்சிகளுக்கு அளித்தது போன்று 01.05.2020 முதல் 31.05.2020 வரை மே–2020 மாதத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்த 35 எண்ணிக்கையில் தற்காலிக டெங்கு நோய் தடுப்பு பணியாளர்களை நபர் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் கூலி 1 மாத காலத்திற்கு ரூ.3 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1530 /2020/எச்1, நாள்.04.05.2020)

**(அனுமதிக்கப்பட்டது)**

**061.** வந்தவாசி நகராட்சிப்பகுதி சன்னதித்தெரு மற்றும் பாலுஉடையார் தெருவில் (வார்டு –14) குடிநீர் விநியோக குழாய் அடிக்கடி வெடிப்பு ஏற்பட்டு வந்தது. அவ்வப்போது சரிசெய்யப்பட்டது. தற்சமயம் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 மீட்டர் 90 mm pvc pipe line பழையது அப்புறப்படுத்திவிட்டு, புதியதாக போட வேண்டிய சூழல் உள்ளது. எனவே குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. உத்தேச செலவினம் ரூ.1,40,000/–

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.643 /2019/இ1, நாள்.01.11.2019)

**(அனுமதிக்கப்பட்டது)**

062. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட (Remooving and relaying of drinking water distribution pipe line of sannathi street and Balu udaiyar street ward No.14 at Vandavasi Municipality) ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

| | |
|---|---|
| 1. ஆர்.கோவிந்தன் | – 0.06% சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 2.வி.சுந்தரம் | –2.75% சதவீதம் மதிப்பைவிட அதிகம் |
| 3.ப.முருகேசன் | – 6.40% சதவீதம் மதிப்பைவிட அதிகம் |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.0.06% சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிகொடுத்துள்ள ஆர்.கோவிந்தன் அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் பதிவு செய்ய லாம்.

(ந.க.எண்.643 /2019/இ1, நாள்.01.11.2019)

**(அனுமதிக்கப்பட்டது)**

**063.** வந்தவாசி நகராட்சியில் தற்போது காஞ்சிபுரம் சாலை வடக்கு காவல் நிலையம் அருகில் உள்ள திரு.சலிமுல்லாகான் த/பெ.நவாப்கான் நெ.26, எப், காஞ்சிபுரம் சாலையில் உள்ள கட்டிடத்தில் இயங்கிவரும் நகர்ப்புற சுகாதாரமையம் மருத்துவமனைக்கு மாதவாடகை ரூ.6000/– மற்றும் மின்சார கட்டணம் ரூ.1000/–க்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.76, நாள்.31.05.2013ன்படி அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் தற்போது மாதவாடகை ரூ.6000/– மின்கட்டணம் ரூ.1000/– ஆக மாதம் ரூ.7000/– வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஏப்ரல்–2020 முதல் மார்ச் 2021 வரை தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஏப்ரல் .2020 முதல் மார்ச் 2021 வரை மாத வாடகை மற்றும் மின்கட்டணம் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.459 /2017/இ1, நாள்.24.04.20)

**(அனுமதிக்கப்பட்டது)**

064. தற்போது உலகமெங்கும் பரவி வரும் கொரோனா எனும் வைரஸ் தொற்று நோய் வந்தவாசி நகராட்சி பகுதிகளில் பரவாமல் இருக்க மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ மூலம் 24.03.2020 முதல் 03.05.2020 முடிய விளம்பரம் செய்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.80,000/க்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் பதிவு செய்தல்.
2. அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும், கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க விழிப்புணர்வு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய தோராய செலவினம் ரூ.80,000/– க்கு மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண்.1015 /2020/இ1, நாள்.23.03.20)

(அனுமதிக்கப்பட்டது)

065. வந்தவாசி நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் எனும் தொற்று நோய் பரவாமல் இருக்கபொதுமக்கள் அறியும் வகையில் 4x3 அளவில் பேனர் செய்து கொள்ளவும், முககவசம் அணியாதவர்களுக்கு அபராத கட்டணம் வசூலிக்க பில் புத்தகம் அச்சடித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.15000/– மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் பதிவு செய்தல்.
2. அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும், பேனர் மற்றும் பில் புத்தகம் அச்சடித்துக் கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.15000/– மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண்.1012 /2020/எச்1, நாள்.04.05.20)

(அனுமதிக்கப்பட்டது)

066. பொது சுகாதாரம் வந்தவாசி நகராட்சியில் பயன்படுத்தி வரும் பொது சுகாதார வாகனம் TN25T6143 குப்பை அகற்றும் வாகனம் டிப்பர் வாகனத்திற்கு 01.04.2020 முதல் 31.03.2020 வரை சாலைவரி (ரோடு டாக்ஸ்) 2020–2021ம் ஆண்டுக்கு ரூ.3030/– மட்டும் வரி (RTO OFFICE CCHEYYAR)ல் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கானபில் இரசீது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அவ்வரியினை ஒட்டுநர் திரு.எஸ்.ராமமூர்த்தி அவர்களால் செலுத்தப்பட்டது எனவே இத்தொகையினை அன்னாருக்கு செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் பதிவு செய்தல்.

(ந.க.எண்.890/2020/எச்1, நாள்.29.05.20)

(அனுமதிக்கப்பட்டது)

**067.** வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிக்காக 10 எண்ணிக்கையிலான Sakthi Man Rashik 400 Tracor mounted sprayers மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களால் ந.க.எண்.4471/46/2019, நாள்.12.04.2020ம் தேதிய கடிதத்தின் படி வழங்கப்பட்டது. இதன் படி ஒரு டிராக்டர் Mounted Sprayer ரூ.3,99,500/– வீதம் மொத்தம் 10 எண்ணிக்கைக்கு 10x399500/– ஆக மொத்தம் ரூ.3999500/– எனவும் இதில் 2 Sprayer–க்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களால் MLACDS வாயிலாக தொகை வழங்கப்பட உள்ளது. 1–க்கு TR 27 நிதியிலும் மீதியுள்ள 7 Tractor Mounted Sprayer–க்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கவும், ஆக மொத்தம் ரூ.27,96,500/– மட்டும் சப்ளை செய்த M/S. தாமிரபரணி விவசாயம், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.0760/2020/எச்1, நாள்.06.04.20)

(அனுமதிக்கப்பட்டது)

**068.** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–11/J1, நாள்.11.04.2020ன்படி வந்தவாசி நகர பகுதியில் டெல்லி சென்று திரும்பிய நபர்கள் மொத்தம் 14 நபர்களுக்கு வந்தவாசி Containment Zone Area ல் உள்ள வீடுகள் மற்றும் அவர்களின் வீடுகளுக்கு உள்ளேயே உள்ள வாடகைதாரர்கள் ஆகியோர்வெளியில் வரக்கூடாது, என்பதால் மாவட்ட கலால் கண்காணிப்பாளர், வட்டாட்சியர், வட்டார மருத்துவர், ஆணையாளர் ஆகியோர் ஆய்வு கூட்ட நடவடிக்கையின்படி கோவிட்19 குடும்பங்களுக்கு வேலண்டர்ஸ் மூலம் 06.04.2020 முதல் 30.04.2020 வரை 586.50 லிட்டர் பால் (மில்க்) வழங்கப்பட்டது. இதற்கு ஒரு லிட்டர் ரூ.58/– வீதம் மொத்தம் ரூ.34,017/–மட்டும் திருமலா மில்க், காந்திரோடு, வந்தவாசி என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.சி.சுப்பிரமணியம் என்பவருக்கு தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.0760/2020/எச்1, நாள்.04.05.2020)

(அனுமதிக்கப்பட்டது)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி.